**<u>மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், கிருஷ்ணராயபுரம்.</u>**

**<u>முன்னிலை</u> : திரு.ஆர்.பாக்கியராஜ், பி.ஏ., பி.எல்.,**

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர், கிருஷ்ணராயபுரம்.**

திருவள்ளுவராண்டு 2055 ஸ்ரீ விசுவாவசு வருடம், பங்குனி மாதம் 26 –ஆம் நாள்
2026 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 –ஆம் நாள் வியாழக்கிழமை

**<u>பழைய ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.148/2023</u>**

**<u>ஆண்டுப்பட்டிகை வழக்கு எண்.299/2025</u>**

**<u>CN0R.NO. TNKR11- 001870-2023</u>**

தமிழக அரசுக்காக
காவல் ஆய்வாளர்,
லாலாப்பேட்டை காவல் நிலையம்,
குற்ற எண்.167/2023
சட்டபிரிவு : 294(b), 323, 324, 506(i) IPC --- புகார்தாரர்

// எதிர்//

A1 – கோகுலகிருஷ்ணன் (எ) கோகுல், வயது 24,
த/பெ. சிதம்பரம்,
பஞ்சாயத்து பிரிலிமிரி பள்ளி பின்புறம்,
ரைஸ் மில் தெரு, பழைய ஜெயங்கொண்டம்,
கிருஷ்ணராயபுரம் தாலுக்கா,
கரூர் மாவட்டம்.

A2 – பூபதி, வயது 23,
த/பெ. சேகர்,
குடித்தெரு, பழைய ஜெயங்கொண்டம்,
கிருஷ்ணராயபுரம் தாலுக்கா,
கரூர் மாவட்டம். --- குற்றம்சாட்டப்பட்டவர்கள்

| | | |
|---|---|---|
| 1. | Name of the court | District Munsif Cum Judicial Magistrate, Krishnarayapuram |
| 2. | Name of the Judge | Thiru.R.Bagyaraj, B.A., B.L., |
| 3. | Date of Judgment | 09.04.2026 |
| 4. | Case Number along with CNR Number | CC 299/2025,<br>CNR No.TNKR11-001870-2023 |
| 5. | Name of the Parties of the case | Inspector of Police<br>lalapet P.S.<br>/Vs/ |

| | | |
|---|---|---|
| | | A1 – கோகுலகிருஷ்ணன் (எ) கோகுல்<br>A2 – பூபதி |
| 6. | Date of Occurrence | 02.05.2023 |
| 7. | Date of Complaint | 02.05.2023 |
| 8. | Date of Arrest if any and Remand | A1 – 03.05.2023<br>A2 – 17.05.2023 |
| 9. | Period of remand of the accused | A1 – 03.05.2023 - 08.05.2023<br>A2 - Anticipatory Bail |
| 10. | Date of Release on bail | A1 – 08.05.2023<br>A2 – Anticipatory Bail |
| 11. | Date of Final report | 26.05.2023 |
| 12. | Date of Committal of the case to the Court of Session | Nil |
| 13. | Date of questioning of the accused U/s. 240 of Code of Criminal Procedure | 20.01.2026 |
| 14. | Date of examination in Chief and Cross examination of the witness | <table><tr><th>No. of. Witness</th><th>Chief</th><th>Cross</th></tr><tr><td>PW-1<br>PW-2<br>PW-3<br>PW-4</td><td>18.03.2026<br>18.03.2026<br>18.03.2026<br>18.03.2026</td><td>-<br>-<br>-<br>18.03.2026</td></tr></table> |
| 15. | Date of filing of all miscellaneous petitions and their results including the results on challenge before Superior Courts except routine petitions like petition under section 317 of the Code | Nil |
| 16 | Date of examination of the accused U/s. 313 of the Code | 30.03.2026 |
| 17. | Details of abscondence of an accused and his appearance/production as the case may be | Nil |
| 18. | Grant of stay by Superior Courts and the results thereof | Nil |
| 19. | Date of Commencement of Trial | 18.03.2026 |
| 20. | Date of closure of Trial | 18.03.2026 |
| 21. | Date of Sentence or order | 09.04.2026 |

| | | |
|---|---|---|
| 22. | Date of service of copy of judgment to the accused | Nil |
| 23. | If any delay, give explanation | No |

இவ்வழக்கானது கடந்த 28.07.2023 ஆம் நாள் இந்நீதிமன்ற கோப்பில் எடுக்கப்பட்டு, கடந்த 30.03.2026 ஆம் நாள் என் முன்பாக இறுதி விசாரணைக்கு வந்து, அரசு தரப்பிற்காக கற்றறிந்த அரசு குற்றத்துறை வழக்கறிஞர் நிலை–1 திருமதி.S.பெரியமறத்தி கரூர் அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், எதிரிக்காக கற்றறிந்த வழக்கறிஞர் திரு.M.பாலாஜி., அவர்கள் ஆஜராகி எடுத்துரைத்தும், இதுநாள் வரை இந்நீதிமன்ற பரிசீலனையிலிருந்து இன்று 09.04.2026 ம் நாள் இந்நீதிமன்றம் வழங்கும், தீர்ப்புரை

| | |
|---|---|
| புகார்தாரர் | அரசுக்காக, காவல் ஆய்வாளர், லாலாப்பேட்டை கா. நி. கு. எண். 167/2023 |
| எதிரிகளின் பெயர் | A1 – கோகுலகிருஷ்ணன் (எ) கோகுல், வயது 24,<br>த/பெ. சிதம்பரம்,<br>பஞ்சாயத்து பிரிலிமிரி பள்ளி பின்புறம்,<br>ரைஸ் மில் தெரு, பழைய ஜெயங்கொண்டம்,<br>கிருஷ்ணராயபுரம் தாலுக்கா,<br>கரூர் மாவட்டம்.<br><br>A2 – பூபதி, வயது 23,<br>த/பெ. சேகர்,<br>குடித்தெரு, பழைய ஜெயங்கொண்டம்,<br>கிருஷ்ணராயபுரம் தாலுக்கா,<br>கரூர் மாவட்டம். |
| அரசு தரப்பில் எதிரிகள் மீது சாட்டப்பட்ட குற்றம் | U/s. 294(b), 323, 324, 506(i) IPC |
| நீதிமன்றத்தால் எதிரிகள் மீது | U/s. 294(b), 294(b) r/w 34, 323, 323 r/w |

| | |
|---|---|
| சாட்டப்பட்ட குற்றம் | 34, 324, 324 r/w 34, 506(2), 506(2) r/w 34 IPC |
| எதிரிகளின் பதில் | குற்றவாளிகள் அல்ல |
| நீதிபதியின் முடிவு | குற்றவாளிகள் அல்ல |
| அரசு கூடுதல் குற்ற வழக்கறிஞர் | திருமதி.S.பெரியமறத்தி |
| எதிரிகள் தரப்பு வழக்கறிஞர் | திரு.M.பாலாஜி |
| இருதரப்பு வாதம் கேட்கப்பட்ட நாள் | 30.03.2026 |
| தீர்ப்பு வழங்கப்பட்ட நாள் | 09.04.2026 |

## தீர்ப்புரை

இவ்வழக்கானது லாலாபேட்டை காவல் நிலையம், காவல் ஆய்வாளர் அவர்களால் கு.வி.மு.ச. பிரிவு 173–இன் கீழ் 02.05.2023 ஆம் தேதி தாக்கல் செய்யப்பட்டுள்ள இறுதி அறிக்கையின் அடிப்படையில் எதிரிகள் மீது இ.த.ச. பிரிவு 294(b), 323, 324, 506(i) IPC ன் கீழான குற்றத்திற்காக குளித்தலை நீதித்துறை நடுவர் எண்.1 நீதிமன்றத்தில் ஆண்டுப்பட்டிகை வழக்கு எண். 148/2023 என்ற எண்ணில் கோப்பிற்கு எடுக்கப்பட்டு இந்நீதிமன்றம் 2021ம் ஆண்டு புதியதாக ஆரம்பிக்கப்பட்டதால் காவல்நிலைய எல்லை நிலவரையறை அடிப்படையில் மாண்புமிகு கரூர் தலைமை குற்றவியல் நீதிமன்ற ROC.No. 19/2024/A1, 30.09.2025 என்ற உத்தரவின்படி இந்நீதிமன்றத்திற்கு மாற்றப்பட்டு இந்நீதிமன்ற சி.சி.எண்.299/2025 ன் படி கோப்பிற்கு எடுக்கப்பட்ட வழக்காகும்.

## இறுதியறிக்கையின் சுருக்கம்:

கடந்த 29.04.2023, 30.04.2023 மற்றும் 01.05.2023 பழையஜெயங்கொண்டத்தில் ஸ்ரீமகாமாரியம்மன் கோவில் திருவிழா நடைபெற்று வந்துள்ளது. வழக்கு சம்பவநாளான 02.05.2023 கடைசி நாளன்று கோவில் தேர் (சப்பரம்) தெருவில் பிரகாரம் வந்து கடைசியாக கோவிலில் வந்து நிலை நிறுத்துவது வழக்கம். அதுபோல் மாலை 06.00 மணியளவில் தேர் ஊர்வலம் வரும்போது கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன் மற்றும் சேகர் மகன் பூபதி மற்றும் இரண்டு நபர்கள் தேரை தூக்க விடாமல் பிரச்சனை செய்துள்ளார்கள். அப்பொழுது வசந்த் மற்றும் அருகில் இருந்தவர்கள் சத்தம்போட்டு தேரை தடுக்ககூடாது என்று கூறி அங்கிருந்து அவர்களை

அனுப்பி வைத்துள்ளார்கள். பின்னர் அன்றைய தினம் இரவு 21.30 மணியளவில் சாட்சி–1 வசந்த் மாரியம்மன் கோவில் அருகே இருந்தபோது அங்கு வந்த எதிரிகள் இருவரும் ஏண்டா தேவுடியா புண்டா மவனே எங்களை தேர் தூக்க ஏண்டா விடமாட்டேங்கிறீங்க என்று சொல்லிக்கொண்டே 1–வது எதிரி கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து முதுகின் பின்புறம் வலதுபக்க தோள்பட்டையில் வெட்டி குத்தி தோள்பட்டையை கிழித்தும் சொற்பகாயத்தை ஏற்படுத்தியும் 2–வது எதிரி பூபதி சாட்சி –1 வசந்தை கீழே தள்ளி காலால் நெஞ்சில் எட்டி உதைத்தும் இத்துடன் நீ தொலைந்தடா என்று கூறி மாறி மாறி அடித்து வலியை ஏற்படுத்தி சொற்பகாயத்தை ஏற்படுத்தியும் அருகில் இருந்தவர்கள் தடுக்கவும் சாட்சி –1 வசந்தை பார்த்து எதிரிகள் இருவரும் கையில் வைத்திருந்த அரிவாளைக் காண்பித்து உன்னை கொல்லாம விட மாட்டோம் என்று மிரட்டியுள்ளார்கள். எனவே எதிரிகளின் செய்கையானது சட்டப்பிரிவு 294(b), 323, 324, 506(i) IPC ன் படி தண்டிக்கப்பட வேண்டியவராகிறார் என்று இறுதியறிக்கை தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

2) லாலாப்பேட்டை காவல் நிலைய சார்பு ஆய்வாளரால் தாக்கல் செய்யப்பட்ட இறுதி அறிக்கை எதிரிகளின் மீது கு.வி.மு.ச. பிரிவு 190(1)ன் படி வழக்கை கருத்தில் கொண்டு குற்ற சட்டப்பிரிவு 294(b), 323, 324, 506(i) IPC – இதசவின் கீழாக கோப்பில் எடுத்துக் கொள்ளப்பட்டு எதிரிகளுக்கு அழைப்பாணை அனுப்ப உத்திரவிடப்பட்டது.

3) எதிரிகள் முன்னிலையானவுடன் அவர்களுக்கு கு.வி.மு.ச பிரிவு 207–ன் படி வழக்கு ஆவணங்களின் நகல்கள் வழங்கி, எதிரிகளிடம் குற்றம் பற்றி வினவப்பட்டது. பின்னிட்டு எதிரிகளின் மீது சட்டப்பிரிவு 294(b), 294(b) r/w 34, 323, 323 r/w 34, 324, 324 r/w 34, 506(2), 506(2) r/w 34 இதசவின் கீழ் குற்றச்சாட்டுக்கள் வனைந்து விளக்கிக் கூறி வினவிய போது எதிரிகள் தங்கள் மீதான குற்றத்தை மறுத்துரைத்தார். எனவே, அரசு தரப்பு சாட்சிகளை விசாரிக்க உத்தரவிடப்பட்டது.

4) இந்த வழக்கில் பட்டியல் சாட்சி 1 முதல் 9 குறிப்பிடப்பட்டுள்ளது. அரசு தரப்பில் அ.சா.1 முதல் அ.சா.4 வரையிலான சாட்சிகள் விசாரிக்கப்பட்டுள்ளார்கள். அரசு தரப்பில் சான்றாவணங்கள் அ.சா.ஆ.1 முதல் அ.சா.ஆ.8 வரையிலான ஆவணங்கள் குறியீடு செய்யப்பட்டுள்ளன. அரசு தரப்பில் பட்டியல் சாட்சி 3 மற்றும் 5 முதல் 8 சாட்சிகள் விசாரிக்காமல் Dispence

செய்யப்பட்டுள்ளார்கள். எதிரிகள் தரப்பில் வாய்மொழி சாட்சியம் அளிக்கவில்லை. ஆவணங்கள் எதுவும் குறியீடு செய்யப்படவில்லை. சான்று பொருள் அ.சா.பொ.1 குறியீடு செய்யப்பட்டுள்ளது.

**5) <u>அரசு தரப்பு சாட்சியங்களிலிருந்து வெளிபடும் வழக்கு சங்கதிகள் சுருக்கம் பின்வருமாறு:</u>**

அ.சா.1. வசந்த் புகார்தாரர் மற்றும் பாதிக்கப்பட்ட நபர். ஆஜர் எதிரிகளை தெரியும். அ.சா.1ன் ஊரைச் சேர்ந்தவர்கள். 02.05.2023ம் தேதி அ.சா.1ன் ஊரில் நடந்த மகாமாரியம்மன் கோவில் திருவிழாவில் தேரை இழுக்கும் போது யாரோ ஒருவர் என்மீது முதுகில் அரிவாளால் வெட்டிவிட்டார். அ.சா.1 க்கு முதுகில் காயம் ஏற்பட்டது. அ.சா.1 க்கு ஏற்பட்ட காயத்திற்கு எதிரிகள் காரணமல்ல. குளித்தலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றார் அ.சா.1யிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.1 உடையது தான் என சாட்சியம் அளித்துள்ளார்.

**5.1)** அ.சா.4 திருமதி. லட்சுமி சார்பு ஆய்வாளர் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார். சிறப்பு சார்பு ஆய்வாளர் திரு.ராஜேந்திரன் கையொப்பம் அ.சா.4க்கு நன்கு தெரியும். கடந்த 02.05.2023 ம் தேதி குளித்தலை அரசு மருத்துவமனையில் இருந்து வரப்பெற்ற தகவலை பெற்று அங்கு உள்நோயாளியாக சிகிச்சையில் இருந்த வசந்த் என்பவர் கொடுத்த புகாரைப் பெற்று நிலைய குற்ற எண்.167/2023 இதச பிரிவுகள் 294(b), 323, 324, 506(2) ன் படி முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தார்.

**5.2**) பின்னிட்டு அன்றைய தேதியிலேயே 00.15 மணிக்கு சாட்சிகள் விமல், சதிஷ்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் சம்பவயிடத்திற்கு சென்று சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகசர், மாதிரி வரைபடம் தயார் செய்தார். அன்றைய தினமே 00.45 மணிக்கு சம்பவ இடத்தில் இருந்து சுமார் 49 செ.மீ நீளமுள்ள அரிவாள் ஒன்றை கைப்பற்றுதல் மகசரில் கைப்பற்றியுள்ளார். சாட்சிகள் வசந்த், மணிகண்டன், ஆனந்த், நாகராஜன், விமல், சதிஷ்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் வாக்குமூலம் பதிவு செய்தார். பின்னர் அ.சா.1க்கு சிகிச்சை அளித்த குளித்தலை அரசு மருத்துவர் சண்முகபிரியா அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் பதிவு செய்தார். இவ்வழக்கில் கைப்பற்றப்பட்ட அ.சா.பொ.1 ஐ சான்று பொருளை படிவம் –95 மூலம் நீதிமன்றத்திற்கு அனுப்பி புலன்

விசாரணை முடித்து இறுதியறிக்கை தாக்கல் செய்தார்.

**6)** அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களில் எதிரிகளுக்கு பாதகமான அம்சங்கள் குறித்து கு.வி.மு.ச. பிரிவு 313(1)(ஆ) மற்றும் 351(1)(ஆ) இன் படி 30.03.2026 ஆம் தேதி வினவியபோது எதிரிகள் அரசு தரப்பு சாட்சிகளின் சாட்சியங்களைப் பொய் சாட்சி, பொய் வழக்கு என்றும், எதிரிகள் தரப்பில் விசாரிக்க சாட்சிகள் இல்லை என்றும், கூறினார்.

**7)** இருதரப்பு கற்றறிருந்த வழக்கறிஞர்களின் வாதம் கேட்கப்பட்டது. வழக்கு கோப்பு ஆவணங்கள் அனைத்தும் கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. தற்போது வழக்கில் தீர்மானிக்கப்பட வேண்டிய விசயம், **அரசு தரப்பில் எதிரிகளின் மீது இதச பிரிவுகள்** 294(b), 294(b) r/w 34, 323, 323 r/w 34, 324, 324 r/w 34, 506(2), 506(2) r/w 34 IPC ன் படி **சுமத்தப்பட்டுள்ள குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கு இடமற்ற வகையில் நிரூபிக்கப்பட்டுள்ளதா**? என்பதே ஆகும்.

**<u>8) தீர்வு.</u>**

**<u>அரசு தரப்பு வழக்கின் சுருக்கம்:-</u>**

கடந்த 29.04.2023, 30.04.2023 மற்றும் 01.05.2023 பழையஜெயங்கொண்டத்தில் ஸ்ரீமகாமாரியம்மன் கோவில் திருவிழா நடைபெற்று வந்துள்ளது. வழக்கு சம்பவநாளான 02.05.2023 கடைசி நாளன்று கோவில் தேர் (சப்பரம்) தெருவில் பிரகாரம் வந்து கடைசியாக கோவிலில் வந்து நிலை நிறுத்துவது வழக்கம். அதுபோல் மாலை 06.00 மணியளவில் தேர் ஊர்வலம் வரும்போது கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன் மற்றும் சேகர் மகன் பூபதி மற்றும் இரண்டு நபர்கள் தேரை தூக்க விடாமல் பிரச்சனை செய்துள்ளார்கள். அப்பொழுது வசந்த் மற்றும் அருகில் இருந்தவர்கள் சத்தம்போட்டு தேரை தடுக்ககூடாது என்று கூறி அங்கிருந்து அவர்களை அனுப்பி வைத்துள்ளார்கள். பின்னர் அன்றைய தினம் இரவு 21.30 மணியளவில் சாட்சி-1 வசந்த் மாரியம்மன் கோவில் அருகே இருந்தபோது அங்கு வந்த எதிரிகள் இருவரும் ஏண்டா தேவுடியா புண்டா மவனே எங்களை தேர் தூக்க ஏண்டா விடமாட்டேங்கிறீங்க என்று சொல்லிக்கொண்டே 1-வது எதிரி கோகுல் (எ) கோகுலகிருஷ்ணன் இடுப்பில் மறைத்து வைத்திருந்த அரிவாளை எடுத்து முதுகின் பின்புறம் வலதுபக்க தோள்பட்டையில் வெட்டி குத்தி தோள்பட்டையை கிழித்தும் சொற்பகாயத்தை ஏற்படுத்தியும் 2-வது எதிரி பூபதி சாட்சி -1 வசந்தை கீழே தள்ளி காலால் நெஞ்சில் எட்டி உதைத்தும் இத்துடன் நீ தொலைந்தடா

என்று கூறி மாறி மாறி அடித்து வலியை ஏற்படுத்தி சொற்பகாயத்தை ஏற்படுத்தியும் அருகில் இருந்தவர்கள் தடுக்கவும் சாட்சி –1 வசந்தை பார்த்து எதிரிகள் இருவரும் கையில் வைத்திருந்த அரிவாளைக் காண்பித்து உன்னை கொல்லாம விட மாட்டோம் என்று மிரட்டியுள்ளார்கள் என்பது அரசு தரப்பு வழக்காகும்.

9) இந்த வழக்கில் காயம்பட்ட அ.சா.1 தனது சாட்சியத்தில்,ஆஜர் எதிரிகளை தெரியும் என்றும், அ.சா.1ன் ஊரைச் சேர்ந்தவர்கள் என்றும், 02.05.2023ம் தேதி அ.சா.1ன் ஊரில் நடந்த மகாமாரியம்மன் கோவில் திருவிழாவில் தேரை இழுக்கும் போது யாரோ ஒருவர் அ.சா.1ன் மீது முதுகில் அரிவாளால் வெட்டிவிட்டார் என்றும், அ.சா.1க்கு முதுகில் காயம் ஏற்பட்டது என்றும், அ.சா.1க்கு ஏற்பட்ட காயத்திற்கு எதிரிகள் காரணமல்ல என்றும், குளித்தலை அரசு மருத்துவமனைக்கு சிகிச்சைக்கு சென்றார் என்றும், அ.சா.1யிடம் காட்டப்படும் புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து மட்டும் அ.சா.1 உடையது தான் என்று சாட்சியம் அளித்து பிறழ் சாட்சியாகியுள்ளார்.

10) அ.சா.1 தனது சாட்சியத்தில், எதிரிகளை தெரியும் என்று சாட்சியம் அளித்துள்ளார். எதிரிகள் தான் ஆபாச வார்த்தைகளால் திட்டினார்கள் என்றும், அருவாளால் வெட்டினார்கள் என்றும், கொலை மிரட்டல் விடுத்தார்கள் என்றும் சாட்சியம் அளிக்கவில்லை. அதனால், அரசு தரப்பு வழக்கு சந்தேகத்திற்கு உள்ளாகிறது.

11) புகாரில் உள்ள கையெழுத்து அ.சா.ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது. புகார் வாக்குமூலம் அ.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ளது. அ.சா.1 எதிரிகளை திட்டி, அருவாளால் வெட்டி காயம் ஏற்படுத்தி, கொலைமிரட்டல் விடுத்ததாக சாட்சியம் அளிக்காததால் புகார் வாக்குமூலம் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க உதவுவதாக இல்லை.

12) அ.சா.1 வசந்த், அ.சா.2 மணிகண்டன், அ.சா.3 நாகராஜன் ஆகியோர்கள் அரசு தரப்பு வழக்கிற்கு ஆதரவாக சாட்சியம் அளிக்காமல் பிறழ் சாட்சியம் அளித்துள்ளார்கள். மேற்படி சாட்சிகளிடம் நீதிமன்ற அனுமதியுடன் அரசு தரப்பில் குறுக்கு விசாரணை செய்த பொழுதும் அரசு தரப்புக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை.

13) அ.சா.5 திருமதி.லட்சுமி சார்பு ஆய்வாளர் புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார். அவரது சாட்சியத்தில், காவல் உதவி ஆய்வாளர் ராஜேந்திரன் அ.சா.1 யிடம் புகார் வாக்குமூலம் பெற்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து சம்பவயிடம் சென்று பார்வை மகசர், மாதிரி வரைபடம், கைப்பற்றுதல் மகசர், விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் தயார் செய்தது பற்றி சாட்சியம் அளித்துள்ளார்.

14) அ.சா.ஆ.3 முதல் தகவல் அறிக்கை மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது கடந்த 02.05.2023 அன்று முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டு 03.05.2023 அன்று நீதிபதியால் பெறப்பட்டுள்ளது தெரிய வருகிறது. இதன் மூலம் அ.சா.1 யிடம் பெற்ற புகார் மனுவிற்கு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்ற சங்கதி நிரூபிக்கப்பட்டுள்ளது.

15) அ.சா.ஆ.4 பார்வை மகசர் மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது சம்பவயிடமானது காவல் நிலையத்திலிருந்து சுமார் 12 கி.மீ வட கிழக்கில் அமைந்துள்ளது. சம்பவமானது பழைய ஜெயங்கொண்டம் மாரியம்மன் கோவில் அருகே நடந்ததாக எழுதப்பட்டு சாட்சிகள் கையொப்பமிட்டுள்ளார்கள். அ.சா.ஆ.5 மாதிரி வரைபடம் மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது பழைய ஜெயங்கொண்டம் வடக்கு குடித்தெரு செல்லும் ரோடு அருகே சம்பவம் நடந்ததாக குறிப்பிடப்பட்டுள்ளது. அ.சா.ஆ.4 மற்றும் அ.சா.ஆ.5 ஆவணங்கள் மூலம் சம்பவயிடத்திற்கு புலன் விசாரணை அதிகாரி சென்று பார்வையிட்டு பார்வை மகசர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்துள்ளர் என்பது தெரிய வருகிறது.

16) அ.சா.ஆ.7 வசந்த் என்பவரின் விபத்து பதிவேடுடன் கூடிய காயச்சான்றிதழ் மேற்படி ஆவணத்தில் 02.05.2023 ம் தேதி பகல் 01.45 மணிக்கு அரிவாளால் வெட்டிய காயம் என பதிவு செய்யப்பட்டுள்ளது. மேலும், காயம்பட்டவருக்கு 1 x 1 x 0.5 cm laceration in right shoulder got admitted IP No. 3972, discharged on 05.05.2023. above said injury is simple in nature என்று காயங்கள் குறிப்பிடப்பட்டுள்ளது.

17) அ.சா.ஆ.6 கைப்பற்றுதல் மகசர் மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது கடந்த 03.05.2023 ம் தேதி 00.45 மணியளவில் சாட்சிகள் விமல், சதிஷ்குமார் ஆகியோர்கள் முன்னிலையில் உதவி ஆய்வாளர்

ராஜேந்திரன் என்பவரால் எதிரியிடமிருந்து சுமார் 49 செ.மீ நீளமுள்ள அரிவாள் ஒன்று கைப்பற்றப்பட்டதாக குறிப்பிடப்பட்டுள்ளது. இவ்வழக்கின் 1ம் எதிரி தான் அ.சா.1 ஐ அரிவாளால் வெட்டினார் என்று அ.சா.1 சாட்சியம் அளிக்காததால் கைப்பற்றுதல் மகசர் அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க உதவவில்லை.

**18)** அ.சா.ஆ.8 படிவம் 91 மேற்படி ஆவணத்தை உற்றுநோக்கும்போது குளித்தலை நீதிமன்றம் எண்.1 ஆர்.பி.எண்.61/2023 லிருந்து இந்நீதிமன்ற R.P.No.109/2025 ன் படி அரிவாள் நீதிமன்றத்தில் பெறப்பட்டுள்ளது தெரிய வருகிறது. அ.சா.பொ.1 வழக்கு அரிவாள் அ.சா.4 ன் மூலம் குறியீடு செய்யப்பட்டுள்ளது. அரிவாளால் 1ம் எதிரி தான் அ.சா.1 ஐ வெட்டினார் என்று சாட்சியம் அளிக்காததால் அ.சா.பொ.1 அரசு தரப்பு வழக்கை நிரூபிக்க உதவவில்லை.

**19)** இவ்வழக்கில் காயம்பட்ட அ.சா.1, நேரில் பார்த்த சாட்சியான அ.சா.2, அ.சா.3 ஆகிய சாட்சிகளும் பிறழ் சாட்சிகளாகி அரசு தரப்பு சாட்சிகளுக்கு ஆதரவாக சாட்சியம் அளிக்கவில்லை. புலன் விசாரணை அதிகாரியின் சாட்சியத்தை வைத்து மட்டும் எதிரிகளின் மீது வனையப்பட்ட குற்றச்சாட்டுகள் சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கப்பட்டதாக எடுத்துக்கொள்ள முடியாது. அதனால் 1, 2 எதிரிகள் மீது இதச பிரிவுகள் 294(b), 294(b) r/w 34, 323, 323 r/w 34, 324, 324 r/w 34, 506(2), 506(2) r/w 34 IPC ன் படி வனையப்பட்ட குற்றச்சாட்டு சந்தேகத்திற்கு அப்பாற்பட்டு நிரூபிக்கவில்லை என்றும், 1, 2 எதிரிகள் விடுதலை பெற தக்கவர்கள் என்றும் இந்நீதிமன்றம் முடிவு செய்கிறது.

**20)** இறுதியில், 1, 2 எதிரிகளுக்கெதிரான இதச பிரிவு 2294(b), 294(b) r/w 34, 323, 323 r/w 34, 324, 324 r/w 34, 506(2), 506(2) r/w 34 IPC – ன் கீழான குற்றச்சாட்டானது சந்தேகத்திற்கிடமில்லாத வகையில் நிரூபிக்கவில்லை என்று இந்நீதிமன்றம் தீர்மானித்துள்ளதால் சந்தேகத்தின் பலனை எதிரிகளுக்கு வழங்கி எதிரிகளை மேற்படி குற்றச்சாட்டுகளிலிருந்து குற்றவாளிகள் அல்ல என தீர்மானித்து குவிமுச பிரிவு 248 (1) மற்றும் 271(1)–ன் கீழ் எதிரிகளை விடுதலை செய்து தீர்ப்பளிக்கப்படுகிறது. இரு தரப்பிலும் சொத்துக்கள் தாக்கல் இல்லை. எதிரிகளின் பிணைமுறி மேல்முறையிட்டு காலத்திற்கு பிறகு மேல்முறையீடு எதுவும் இல்லாத நிலையில் ரத்து செய்ய உத்தரவிடப்படுகிறது.

இவ்வழக்கில் அ.சா.பொ.1 ஆக குறியீடு செய்யப்பட்டுள்ள அரிவாள் பயனற்றது என்பதால் குற்றவியல் நடைமுறை விதிகள் 2019 விதி 262ன் படி புலன் விசாரணை முகமையிடம் கொடுத்து அளிக்க உத்தரவிடப்படுகிறது.

2026-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 09 -ம் நாள் இத்தீர்ப்பு என்னால் சுருக்கெழுத்து தட்டச்சருக்கு சொல்லப்பட்டு, அவரால் குறிப்பெடுக்கப்பட்டு கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு இன்று என்னால் சரிபார்க்கப்பட்டு இந்த நீதிமன்றத்தில் அவையறிய பகரப்பட்டது.

RAMAIYAH BAGYARAJ Digitally signed by RAMAIYAH BAGYARAJ Date: 2026.04.10 03:53:33 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**
**கிருஷ்ணராயபுரம்.**

**பின் இணைப்பு**

**அரசு தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சிகள்**

| | |
|---|---|
| அ.சா.1 | வசந்த் (புகார்தாரர்) |
| அ.சா.2 | மணிகண்டன் (நேரில் பார்த்த சாட்சி) |
| அ.சா.3 | நாகராஜன் (நேரில் பார்த்த சாட்சி) |
| அ.சா.4 | திருமதி.லட்சுமி (புலன் விசாரணை பற்றி சாட்சியம் அளித்துள்ளார்) |

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்றாவணங்கள்**

| | |
|---|---|
| அ.சா.ஆ.1 | புகார் வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து |
| அ.சா.ஆ.2 | புகார் வாக்குமூலம் |
| அ.சா.ஆ.3 | முதல் தகவல் அறிக்கைபார்வை மகஜர் |
| அ.சா.ஆ.4 | பார்வை மகஜர் |
| அ.சா.ஆ.5 | மாதிரி வரைபடம் |
| அ.சா.ஆ.6 | கைப்பற்றுதல் மகசர் |
| அ.சா.ஆ.7 | விபத்து பதிவேட்டுடன் கூடிய காயச்சான்றிதழ் |
| அ.சா.ஆ.8 | படிவம் - 95 |

**எதிரிகள் தரப்பில் விசாரிக்கப்பட்டுள்ள சாட்சி:-இல்லை**

**எதிரிகள் தரப்பில் சான்று பொருட்கள் :- இல்லை**

**அரசு தரப்பில் குறியீடு செய்யப்பட்டுள்ள சான்று பொருள்:–**

| | |
|---|---|
| அ.சா.பொ.1 | அரிவாள் |

RAMAIYAH BAGYARAJ Digitally signed by RAMAIYAH BAGYARAJ Date: 2026.04.10 03:53:38 +0530

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர்,**

**கிருஷ்ணராயபுரம்.**

**பின்சேர்க்கை:**

1. தீர்ப்பு விவரம் காவல் துறைக்குத் தெரிவிக்கப்பட்டது.
2. விசாரணைக் காலத்தில் எதிரி பிணையில் இருந்து வந்துள்ளார்.
3. எந்த சாட்சியும் விசாரணைக்காக 3 தினங்களுக்கு மேல் நிறுத்தி வைக்கப்படவில்லை.

**நகல்:**

மாண்பமை தலைமை குற்றவியல் நீதித்துறை நடுவர் அவர்களுக்கு பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது.